# ஒரு புரட்சிகரமான விடுதலை இயக்கம் அவசியம்

www.tamilarangam.net

இன்று தமிழ்த் தேசிய இனமானது, சிங்கள ஆயுதப் படைகளின் பயங்கர வாதத்தின் மத்தியில் பயந்து வாழ்கிறது. மிருகத்தனமான பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டு, மக்களை மிரட்டி மண்டியிடச் செய்து, தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை வேட்கையை நசுக்கிவிடுவதே, இனவெறி பிடித்த சிங்கள ஆளும் கும்பலின் இலட்சியமாக இருக்கிறது. இந்த ஆயுத பலாத்காரத்தை, அகிம்சையென்ற அமைதி வழிப் போராட்டத்தால் முறியடிக்க முடியாது என்பது இன்று அனைவரும் உணர்ந்த அரசியல் உண்மையாகும். ஆயுத பலாத்காரம் எம்மீது திணிக்கப்பட்டு, நாம் அடிமை வாழ்விற்கு ஆளாக்கப்பட்டுள்ளோம். எமது விடுதலையின் பாதை, இனி, ஆயுதம் தரித்த புரட்சிப் போராட்டமாக அமைய வேண்டுமே தவிர வேறொன்றுமல்ல. அநீதிக்கும் அட்டூழியத்திற்கும் எதிராகப் புரட்சி செய்வது, பலாத்காரத்திற்கு எதிராகப் போர் செய்வது அதர்மம் ஆகாது. அது புனிதமான செயல். மனித செயல்களில் புனிதமானது புரட்சி. புரட்சிதான் புதுமையைப் பிறப்பிப்பது. புரட்சிதான் புது வாழ்வைத் தருவது. புரட்சியின்றிப் புதியது பிறக்காது. புரட்சியென்பது சரித்திரத்தின் விசை. புரட்சி செய்பவன் சரித்திரம் படைப்பவன். அடக்குமுறையின் கீழ் அடிமை வாழ்க்கையில் தள்ளப்பட்ட எமது மக்களின் விடுதலைக்குப் புரட்சி அவசியம். அதாவது, ஆயுதம் தாங்கிய புரட்சிப் போராட்டம் அவசியம்.

இனவாதம் பிடித்த, சிங்கள இராணுவ இயந்திரத்தின் முன்பாக நிராயுதபாணிகளாக நின்றுகொண்டு, விடுதலை முழக்கம் எழுப்புவதில் எவ்வித பயனும் இல்லை. எம்மிடம் ஆத்ம பலம் மட்டும் இருந்தால் போதாது. ஆயுத பலமும் அவசியம். ஆயுத பலம்தான் இன்று உலகத்தை ஆளுகிறது. ஆயுதம்தான் மக்களை அடிமை கொள்கிறது. ஆயுதம்தான் மக்களை அடக்கு முறைக்கு ஆளாக்குகிறது. எம்மை அடிமைப்படுத்தி வைத்திருப்பது— சிங்கள மக்கள் அல்ல, சிங்கள ஆளும் வர்க்கத்தின் ஆயுதங்களே. ஆயுத அடக்கு முறையின் கீழ் விடுதலை வேண்டி நிற்கும் ஒரு தேசிய இனமாகிய நாம், முதலில் ஆயுதத்திற்கு எதிராகப் போராட எம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும். உலக தேசிய விடுதலை இயக்கங்கள் எல்லாம் ஆயுதம் தரித்த விடுதலைப் போராட்டத்தில்தான் குதித்துள்ளன. ஆயுத அடக்கு முறையை, ஆயுதத்தால்தான் முறியடிக்க முடியும் என்ற யதார்த்த உண்மையை, இந்த விடுதலை இயக்கங்கள் உணராமலில்லை. ஆயுதம்தான் மக்களை அடக்கவும் செய்கிறது; அதே வேளை மக்களை விடுவிக்கவும் உதவுகிறது. ஆகவே, சிங்கள ஆயுதப் படைகளின் அடக்கு முறையை உடைத்தெறிந்து, எமது மக்கள் விடுதலை பெறுவதாயின் ஆயுதம் தரித்த போராட்டத்தால்தான் அது சாத்தியமாகும் என்பதில் அசையாத உறுதி கொண்டவர்கள் நாம். இந்த உறுதியில்தான், நாம் ஆயுதம் தரித்த போராட்டத்திற் குதித்துள்ளோம்.

தேசிய விடுதலைப் போராட்ட அமைப்பையுடைய ஆயுதப் புரட்சியென்பது, அப்படி இலகுவான செயலல்ல என்பதை நாம் நன்கு உணருவோம். ஒரு புரட்சிகரமான கொள்கைத் திட்டத்தின் கீழ் கட்டியெழுப்பப்பட்ட, ஒரு புரட்சிகரமான விடுதலையியக்கத்தால்தான் இந்தப் பிரமாண்டமான இராணுவ சாதனையைச் சாதிக்க முடியும். மிகவும் நுணுக்கமாய்த் திட்டமிட்டுச் சரிவர எம்மைத் தயார் செய்து கொள்ளாமல், அவசரப்பட்டு, ஆயுதப் புரட்சியில் குதிக்கும் கற்பனாவாதப் போக்கு எம்மிடம் எள்ளளவும் இல்லை. 1971-ஆம் ஆண்டு ஏப்பிரலில், ரோகண விஜேவீராவின் தலைமையிலான சிங்கள இளைஞரின் ஆயுதக் கிளர்ச்சி, எவ்விதம் கொடூரமாக நசுக்கப்பட்டதென்பதை விரிவாக ஆய்வு செய்கிறோம். சித்தாந்தத் தெளிவின்றி, கொள்கைத் திட்டமின்றி, ஒருமைப்பாடின்றி, பொதுசன ஆதரவின்றி, ஆயுத பலமின்றி, வெளிநாட்டு அனுதாபமின்றி, அரசியல் சூழ்நிலையை அசட்டை செய்து, அவசரப்பட்டு ஆயுதக் கிளர்ச்சியில் குதித்ததால் இக் கிளர்ச்சிக்குப் பத்தாயிரம் இளைஞர்கள் பலியானார்கள். எமது அயல் நாட்டில் கிளர்ந்தெழுந்த இந்த ஆயுதக் கிளர்ச்சியும், அதனை மிருகத்தனமாக நசுக்கிய சிங்கள இராணுவத்தின் வெறியாட்டமும் எமக்குப் பல அரசியல் உண்மைகளைப் போதிப்பதாக உள்ளன.

தமிழ்த் தேசிய விடுதலையையும், சோசலிச சமூகப் பொருளாதாரத்தையும் நோக்காகக் கொண்ட ஒரு புரட்சிக்கு முதற்படியாக, ஒரு புரட்சிகரமான கொள்கைத் திட்டம் அவசியம். அந்தப் புரட்சிகரமான கொள்கைத் திட்டத்தைச் செயற்படுத்த, ஒரு புரட்சிகரமான விடுதலை இயக்கம் அவசியம். புரட்சிகரமான சித்தாந்தத் தெளிவும், புரட்சிகரமான செயல் திட்டமும், புரட்சிகரமான இயக்கமும் இல்லாமல், ஒரு புரட்சி நடைபெறாது.

தமிழீழ விடுதலைப் புலிகள்
LIBERATION TIGERS OF THAMIL EALAM

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்